


**31. 07. 2025**

**தலைப்பு செய்திகள்**

**1.** தேச பாதுகாப்பில் மத்திய அரசின் செயல்பாடுகளை உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா மாநிலங்களவையில் சிறப்பாக எடுத்துரைத்ததாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

2. பீஹார் மாநில வாக்காளர் பட்டியல் விவகாரம் உள்ளிட்ட பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளியால் நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை இன்று ஒத்திவைக்கப்பட்டன.

**3.** மதுரையில் 229 கோடி ரூபாய் மதிப்பிலான மத்திய சிறைச்சாலை கட்டிட பணிகளுக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

**4.** தமிழ்நாட்டில் குற்றச்சம்பவங்களை தடுத்து நிறுத்த அரசு முனைப்புடன் செயலாற்றுவதன் அவசியத்தை பிஜேபி மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

**5.** இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான **5**-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லண்டன் ஓவலில் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடங்குகிறது.

**இனி விரிவான செய்திகள்**

***********

**பிரதமர் பாராட்டு**

தேச பாதுகாப்பில் மத்திய அரசின் செயல்பாடுகளை உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா மாநிலங்களவையில் சிறப்பாக எடுத்துரைத்ததாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

தீவிரவாத முகாம்களை தகர்த்தழித்தது, ஆபரேசன் சிந்தூர் வெற்றி போன்றவற்றில் மத்திய அரசின் நிலைப்பாடுகளை திரு.அமித்ஷா தெளிவாக எடுத்துரைத்ததாக தமது சமூகவலைதள பதிவில் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

நாட்டு மக்களை அரசு எவ்வாறு பாதுகாக்கிறது என்றும், பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு ஆபரேசன் சிந்தூர் மூலம் தக்க பதிலடி கொடுத்ததையும் எடுத்துரைத்த அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தீவிரவாதத்தை உலகின் கவனத்திற்கு எடுத்துச்சென்ற இந்தியாவின் முயற்சியை விளக்கியதை பிரதமர் பாராட்டியுள்ளார்.

இதனிடையே பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

இந்நிலையில் பிரதமர் திரு.நரேந்திரமோடி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர் ஷேக் மொகமது பின் சையத்துடன் தொலைபேசி மூலம் இன்று உரையாடினார்.

இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர நலன் சார்ந்த விஷயங்களில் முன்னேற்றம் குறித்து இரு தலைவர்களும் ஆலோசித்தனர்.

மக்கள் பயன்கள் குறித்த பல்வேறு திட்டங்களையும் இருதலைவர்களும் ஆலோசித்தனர்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி இந்திய வரலாற்றில் நீண்டகால பிரதமராக பணியாற்றுவதற்கு அவர் பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்தார்.

***********

**நாடாளுமன்றம்**

பீஹார் மாநில வாக்காளர் பட்டியல் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவையில் அவைத்தலைவர் திரு.ஓம்.பிர்லா கேள்வி நேரத்தை எடுக்க முற்பட்டபோது எதிர்கட்சி உறுப்பினர்கள் அவையின் மைய பகுதியில் குழுமி பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தத்தை திரும்ப பெற வேண்டும் என்று கோரி முழக்கமிட்டனர்.

இதனால் நிலவிய அமளியால் மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது

மாநிலங்களவையிலும் இதே நிலைமை காணப்பட்டதால் அவை முதலில் நண்பகல் வரையிலும் பின்னர் பிற்பகல் 2 மணிவரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக நிசார் செயற்கைகோள், வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டமைக்காக இஸ்ரோ மற்றும் நாசா விஞ்ஞானிகளுக்கு இருஅவைகளிலும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

***********

**குளச்சல் தினம்**

284ஆவது குளச்சல் வெற்றி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1741ஆம் ஆண்டு டச்சு படையிடமிருந்து திருவிதாங்கூர் சமஸ்தானத்தை மீட்ட வெற்றியை குறிக்கும் வகையில் ஆண்டுதோறும் ஜூலை 31ஆம் தேதி இத்தினம் கன்னியாகுமரி மாவட்டத்தில் கொண்டாடப்படுகிறது.

டச்சு படையிடமிருந்து திருவிதாங்கூரை மீட்பதற்கான குளச்சல் போரில் திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மனின் துணிச்சல் மிகு வெற்றியை குறிக்கும் வகையில் சிறப்பு கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

இத்தினத்தை ஒட்டி குளச்சல் போர் நினைவு சின்னத்தில் இந்திய ராணுவ படையின் மெட்ராஸ் ரெஜிமன்ட் பிரிவின் கமாண்டிங் அதிகாரி கர்னல் அவினாஷ் குமார் சிங், மற்றும் ஏராளமான ராணுவத்தினர், முன்னாள் படைவீரர்கள், உள்ளூர் மக்கள் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்

குளச்சல் போரின்போது கடல் மார்க்கமாகவும், நில மார்க்கமாகவும் இந்திய படையினர் டச்சு படையினரை எதிர்த்து போரிட்டு அடைந்த சிறப்பான வெற்றியை குறிக்கும் வகையில் குளச்சல் கடற்கரையில் போர் நினைவு சின்னம் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நாளை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு தளவாட கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

***********

**முதலமைச்சர்**

தமிழ்நாட்டில் காவல்துறை, தீயணைப்பு, சிறைகள், தடய அறிவியல் உள்ளிட்ட துறைகள் சார்பில் பல்வேறு இடங்களில் கட்டப்பட்ட **45அரை** கோடி ரூபாய் மதிப்பிலான கட்டிடங்களை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்திலிருந்து இன்று காணொலி மூலம் திறந்துவைத்தார்.

229 கோடி ரூபாய் மதிப்பிலான மதுரை மத்திய சிறைச்சாலைக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு மாநில திருநங்கையர் கொள்கை 2025-ஐயும் அவர் வெளியிட்டார்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தட்டச்சர் பணிக்கு தேர்வான 39 பேருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்றுள்ள தமிழகத்தை சேர்ந்த 135 ஆதி திராவிட பழங்குடியின மாணாக்கருக்கு மடி கணினிகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை முதலமைச்சர் வழங்கினார்.

***********

**முதலமைச்சர் தொடர்ச்சி**

இதனிடையே தமிழகத்தில் வரும் 2ஆம் தேதி தொடங்கப்படும் நலன் காக்கும் மருத்துவ திட்ட முகாம்களை மக்கள் பெருமளவு பயன்படுத்த முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் பங்கேற்கவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

மாநிலம் முழுவதும் ஆயிரத்து 256 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக கூறியுள்ள முதலமைச்சர் மருத்துவ வசதிகள் குறைந்த ஊரக பகுதிகள் பழங்குடியினர் பகுதிகள் முன்னரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு முகாம்கள் நடத்தப்பட உள்ளதாக கூறியுள்ளார்.

பொது மருத்துவம், மகப்பேறு மருத்துவம், இயன்முறை மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் மருத்துவ சேவைகளோடு மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் பதிவு செய்தல், மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு அங்கீகார சான்றிதழ் இம்முகாம்களிலேயே வழங்கப்பட இருப்பதாக குறிப்பிட்டார்.

***********

**சேகர்பாபு**

சென்னை கிளாம்பாக்கம் ரயில் நிலையம், விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும தலைவர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கும் நடுத்தர மக்களுக்கும் பயனளிக்கும் வகையிலான பல்வேறு கட்டமைப்பு பணிகள் மாநிலத்தில் மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

செங்கல்பட்டில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

முன்னதாக வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பெரம்பூர் பகுதியில் கட்டப்படும் சமுதாய நல கூடம், உள்ளிட்டவற்றை அமைச்சர் இன்று ஆய்வு செய்தார்.

***********

**நயினார் நாகேந்திரன்**

தமிழ்நாட்டில் குற்றச்சம்பவங்கள் தடுத்து நிறுத்த அரசு முனைப்புடன் செயலாற்ற வேண்டும் என பிஜேபி மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இச்சம்பவங்களை தடுக்கும் வகையில் தமிழக அரசு தனி சட்டம் கொண்டுவந்து சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

***********

**ராமதாஸ்**

தமிழ்நாட்டில் ஆசிரியர்களின் தொடர் போராட்ட பிரச்சனைக்கு அரசு உடனடியாக தீர்வு காண வேண்டும் என்று பா.ம.க நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

விழுப்புரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய மக்கள் சேவை தொழில்கள் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

***********

**வல்வில் ஓரி – பேருந்து**

ஆடிபெருக்கு வரும் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுவதை ஒட்டி தமிழகம் முழுவதும் ஆயிரத்து 90 சிறப்பு பேருந்துகள் நாளையும், நாளைமறுநாளும் இயக்கப்படும் என அரசு போக்குவரத்து கழகம் அறிவித்துள்ளது.

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் வல் வில் ஓரி விழா நாளை மறுநாள் தொடங்குவதால் கொல்லிமலை பகுதிகளில் தூய்மை பணிகளை ஆட்சித்தலைவர் திருமதி **துர்கா மூர்த்தி** இன்று துவக்கிவைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

***********

**திருத்தணி**

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் இரண்டாம் கட்ட மலைபாதை திட்ட பணிகளை நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர் தலைமையிலான குழு இன்று ஆய்வு செய்ததாக எமது திருவள்ளூர் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

***********

**மனோ தங்கராஜ்**

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு பயனாளிகளுக்கு நல திட்ட உதவிகளை மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு.மனோ தங்கராஜ் திருச்சி மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று வழங்குகிறார்.

***********

**நாகை**

நாகை அருகே கொடியாலத்தூரில் குறுவை நெற்பயிர்கள் நீரின்றி கருகி வருவதால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

சாகுபடி செய்த வயலில் கால்நடைகளை மேய்க்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக விவசாயி எமது நாகை செய்தியாளரிடம் தெரிவிக்கையில்

**வாய்ஸ்**

***********

**இருவரி**

**சிவகங்கை மாவட்ட அஞ்சல் நிலையங்களில்** வரும் 4ஆம் தேதிமுதல் புதிய தொழில்நுட்பத்துடன் சேவைகள் தொடங்க உள்ளது.

அனைத்து பணிகளும் டிஜிட்டல் மயமாக்கப்பட உள்ளதால் நாளை மறுநாள் தபால் சேவைகள் நிறுத்தப்படும் என கோட்ட கண்காணிப்பாளர் திரு.மாரிமுத்து தெரிவித்துள்ளார்.

இதேபோல் தாம்பரம் கோட்டத்தின் அனைத்து அஞ்சலகங்களும் வரும் 4ஆம் தேதிமுதல் புதிய தொழில்நுட்பங்களுடன் செயல்பட உள்ளது.

**கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தனியார்துறை** வேலைவாய்ப்பு முகாம் நாளை மறுநாள் நடைபெறுகிறது.

**பெரம்பலூர் மாவட்டத்தில் மானியத்துடன்** கூடிய நாட்டுக்கோழி பண்ணைகள் அமைக்க விரும்பும் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திரு.அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

***********

**தண்ணீர் திறப்பு**

ஈரோடு மாவட்டம் கீழ்பவானி கால்வாயிலிருந்து பாசனத்திற்காக இன்று மாலை தண்ணீர் திறக்கப்படுகிறது.

120 நாட்களுக்கு திறக்கப்படும் இந்த தண்ணீரின் மூலம் ஈரோடு திருப்பூர் கரூர் மாவட்டங்களில் உள்ள ஒரு லட்சத்து மூன்றாயிரத்து 500 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதிபெறும்.

இதனிடையே திருச்சி, அரியலூர், தஞ்சாவூர் மாவட்டங்களின் பாசன வசதிக்காக மேட்டூர் அணையிலிருந்து **நாளைமுதல்** தண்ணீர் திறக்கப்பட உள்ளது.

***********

**கிரிக்கெட்**

இந்திய இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான **5**-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லண்டன் ஓவலில் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடங்குகிறது.

காயம் காரணமாக ரிஷப் பந்த் வெளியேறிய நிலையில், துருவ் ஜூரல் இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இங்கிலாந்து தற்போது 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

***********

**பேட்மிட்டன்**

சீன மக்காவ் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு இந்தியாவின் தருண் மன்னேபள்ளி முன்னேறியுள்ளார்.

காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ஹாங்காங்கின் லீ-யை 19-21 21-14 22-20 என்ற செட்களில் அவர் வென்றார்.

மற்றொரு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் லக்ஷயா சென் - இந்தோனேஷியாவின் **Chico Aura-**வை இன்று பிற்பகல் எதிர்கொள்கிறார்.

***********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**